1. ஆண்டுதோறும் உலக மாற்றுத்திறனாளிகள் நாள் கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ. 1 டிசம்பர்

ஆ. 3 டிசம்பர் ☑

இ. 5 டிசம்பர்

ஈ. 7 டிசம்பர்

✓ உலக மாற்றுத்திறனாளிகள் நாளானது ஆண்டுதோறும் டிசம்பர்.3 அன்று கடைப்பிடிக்கப்படுகிறது. உலக மாற்றுத் திறனாளிகள் நாளானது கடந்த 1992ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையால் ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஒரு பில்லியனுக்கும் அதிகமான உலக மக்கள் அல்லது உலக மக்கள்தொகையில் தோராயமாக 15 சதவீதம் பேர், ஏதோவொரு வகையான ஊனத்துடன் வாழ்கின்றனர். மொத்த ஊனமுற்றவர்களில் 80 சதவீதம் பேர் வளரும் நாடுகளில் வாழ்கின்றனர்.

2. எந்த நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் அடுத்த தலைமுறை மின்னணு சாதனங்களை உருவாக்க ஆற்றல் திறன்கொண்ட கணினியல் தளத்தை உருவாக்கியுள்ளனர்?

அ. ஐஐடி மெட்ராஸ்

ஆ. ஐஐடி தில்லி

இ. இந்திய அறிவியல் கழகம் ☑

ஈ. ஐஐடி பம்பாய்

✓ இந்திய அறிவியல் கழகத்தில் (IISc) அமைந்துள்ள நானோ அறிவியல் மற்றும் பொறியியல் மையத்தின் (CeNSE), ஆராய்ச்சியாளர்கள், அடுத்த தலைமுறை மின்னணு சாதனங்களை உருவாக்குவதில் உறுதியளிக்கும் அதிக ஆற்றல் திறன்கொண்ட கணினி தளத்தை உருவாக்கியுள்ளனர். நிரப்பு உலோக–ஆக்சைடு குறைக்கடத்திகளை (CMOS) பயன்படுத்துவதற்குப் பதிலாக, 'மெமிரிஸ்டர்கள்' எனப்படும் கூறுகளை இக்குழுவானது பயன்படுத்தியது; அவற்றால் தரவைச் சேமிக்கவும் கணக்கீடு செய்யவும் முடியும்.

3. அண்மைய தரவுகளின்படி, 2010 மற்றும் 2021க்கு இடையில் இந்தியாவில் காணப்பட்ட வருடாந்திர HIV தொற்று விகிதத்தின் போக்கு என்ன?

அ. குறைகிறது ☑

ஆ. உயர்த்துதல்

இ. எந்த மாற்றமும் இல்லை

ஈ. தரவு எதுவும் கிடைக்கவில்லை


HIV

✓ சமீபத்திய தரவுகளின்படி, தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு (NACO) 2010 மற்றும் 2021க்கு இடையில் நாட்டின் வருடாந்திர HIV தொற்று விகிதம் 46% குறைந்துள்ளது என்று அறிவித்தது. இந்தச் சரிவு உலகளாவிய சராசரியான 32 சதவீதத்திற்கு எதிராக உள்ளது. NACOஇன் கூற்றுப்படி, எய்ட்ஸ் தொடர்பான இறப்புகளும் இந்தக் காலகட்டத்தில் உலகளாவிய சராசரியான 52 சதவீதத்திற்கு எதிராக 76 சதவீதம் குறைந்துள்ளது.

4. மாநிலத்தில் இட ஒதுக்கீட்டை 76%ஆக உயர்த்துவதற்கான மசோதாவை நிறைவேற்றியுள்ள மாநிலம் எது?

அ. ஆந்திர பிரதேசம்

ஆ. ஒடிஸா

இ. சத்தீஸ்கர் ☑

ஈ. கேரளா

✓ சத்தீஸ்கர் மாநில சட்டசபையில் அரசு வேலைவாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீட்டை 76%ஆக உயர்த்துவதற்கான இரு சட்டத்திருத்த மசோதாக்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன. இந்த மசோதாக்களின்படி, பட்டியல் பழங்குடியினர் இப்போது 32%மும், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 27%மும் பட்டியலின சாதியினர் 13%மும் இடஒதுக்கீட்டைப் பெறுவார்கள். அதே வேளையில் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினர் (EWS) பொது வேலைவாய்ப்பு மற்றும் கல்வி நிறுவனங்களில் சேர்க்கையில் 4% இடஒதுக்கீட்டைப் பெறுவார்கள்.

5. திருக்கோவில்களுக்குள் கைபேசி பயன்பாட்டுக்குத் தடைவிதித்த உயர்நீதிமன்றம் எது?

அ. சென்னை உயர்நீதிமன்றம் ☑

ஆ. தில்லி உயர்நீதிமன்றம்

இ. பாம்பே உயர்நீதிமன்றம்

ஈ. கல்கத்தா உயர்நீதிமன்றம்

✓ ஆன்மிக மணம் கமழும் தமிழ்நாடு முழுவதும் உள்ள திருக்கோவில்களில் கைபேசி பயன்படுத்துவதற்கு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் தடைவிதித்துள்ளது. அந்நீதிமன்றத்தின் கூற்றுப்படி, வழிபாட்டுத் தலங்களின் தூய்மை மற்றும் புனிதத்தைப் பேணவே கைபேசி பயன்பாட்டுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. கோவில்களில் மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் கைபேசி காப்புப்பெட்டகத்தை அமைக்க வேண்டும் என்றும், இந்த ஆணையை பின்பற்றுவதை உறுதிசெய்ய பாதுகாப்புப் பணியாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும் மெட்ராஸ் உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

6. பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகத்தின் கூற்றுப்படி, அதிக எண்ணிக்கையில் புதிய நிறுவனங்களைச் சேர்த்த மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. கர்நாடகா

இ. மகாராஷ்டிரா ☑

ஈ. உத்தர பிரதேசம்

MINISTRY OF CORPORATE AFFAIRS
सत्यमेव जयते
GOVERNMENT OF INDIA

✓ நடுவண் பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகத்தின் தரவுகளின்படி, COVID-19 தொற்று பரவியதிலிருந்து அதிக எண்ணிக்கையிலான புதிய நிறுவனங்களை மகாராஷ்டிர மாநிலம் சேர்த்துள்ளது. அதைத்தொடர்ந்த இடத்தில் உத்தர பிரதேச மாநிலம் உள்ளது. உத்தர பிரதேச மாநிலம் கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் 30,000 புதிய நிறுவனங்களைச் சேர்த்துள்ளது. மகாராஷ்டிரா மற்றும் தில்லிக்கு அடுத்தபடியாக செயல்படும் நிறுவனங்களின் எண்ணிக்கையில் உத்தர பிரதேச மாநிலம் மூன்றாவது இடத்தில் உள்ளது.

7. ஒவ்வோர் ஆண்டும், 'சகிப்புத்தன்மைக்கான உலக நாள்' கடைப்பிடிக்கப்படுகிற தேதி எது?

அ. 12 நவம்பர்

ஆ. 14 நவம்பர்

இ. 16 நவம்பர் ☑

INTERNATIONAL DAY FOR TOLERANCE

ஈ. 18 நவம்பர்

✓ கடந்த 1996ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையானது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர்.16ஆம் தேதியன்று சகிப்புத்தன்மைக்கான உலக நாளாக கடைப்பிடிக்கப்படும் என அறிவித்தது. கலாச்சாரங்களின் இணக்கத்திற்கான சர்வதேச தசாப்தமானது (2013-2022) உலகெங்கிலும் UNESCO அமைப்பால் முன்னெடுக்கப்படுகிறது. UNESCO, சகிப்புத்தன்மை மற்றும் அகிம்சையை ஊக்குவிப்பதற்காக, 'UNESCO-மதன்ஜீத் சிங்' பரிசு என்ற பெயரில் ஒரு பரிசை உருவாக்கியது.

8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'PSMA ஒப்பந்தம்' என்பதுடன் தொடர்புடையது எது?

அ. பயங்கரவாத எதிர்ப்பு

ஆ. முறைபடுத்தப்பெறாத மீன்பிடித்தல் ☑

இ. பருவநிலை மாற்றம்

ஈ. சர்வதேச வர்த்தகம்

✓ உணவு மற்றும் உழவு அமைப்பின் "Agreement on Port State Measures (PSMA)" ஆனது சட்டவிரோதமான & முறைபடுத்தப்பெறாத மீன்பிடித்தலைத் தடுத்தற்காக வடிவமைக்கப்பட்ட முதல் சர்வதேச ஒப்பந்தமாகும். அங்கோலா, எரித்திரியா, மொராக்கோ மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகள் அண்மையில் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இதையடுத்து இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் எண்ணிக்கை நூறு ஆனது.

9. இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தடகள ஆணையத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டு ஆளுமை யார்?

அ. பி வி சிந்து

ஆ. மேரி கோம் ☑

இ. ஸ்ரீஜேஷ்

ஈ. ஜோஷ்னா சின்னப்பா

✓ ஆறு முறை உலக மகளிர் குத்துச்சண்டை சாம்பியனும் ஒலிம்பிக் பதக்கமும் வென்ற மேரி கோம் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தடகள ஆணையத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த ஆணையத்தின் துணைத்தலைவர் பதவிக்கு டேபிள் டென்னிஸ் வீரர் சரத் கமல் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற பி வி சிந்து, ககன் நரங், மேரி கோம் மற்றும் மீராபாய் சானு உட்பட 10 ஒலிம்பிக் வீரர் / வீராங்கனைகள் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தடகள ஆணைய உறுப்பினர்களாக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

10. தேசிய முதலீடு மற்றும் உட்கட்டமைப்பு நிதியத்தின் (NIIF) முதல் முன்மொழியப்பட்ட இருதரப்பு நிதியம் எது?

அ. இந்தியா-இலங்கை நிதியம்

ஆ. இந்தியா-நேபாள நிதியம்

இ. இந்தியா-ஜப்பான் நிதியம் ☑

ஈ. இந்தியா-ஆஸ்திரேலியா நிதியம்

✓ நடுவண் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தேசிய முதலீடு மற்றும் உட்கட்டமைப்பு நிதியத்தின் (NIIF) நிர்வாகக் குழுமத்தின் 5ஆவது கூட்டத்திற்கு தலைமைதாங்கினார். NIIFஇன் முதல் இருதரப்பு நிதியம்-தேசிய முதலீடு மற்றும் உட்கட்டமைப்பு நிதி லிட் மற்றும் பன்னாட்டு வளர்ச்சிக்கான ஜப்பான் வங்கி (JBIC) ஆகியவற்றுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்மூலம் முன்மொழியப்பட்டது. அது இந்திய அரசின் பங்களிப்புடன் முன்மொழியப்பட்ட 'இந்தியா-ஜப்பான் நிதியம்' ஆகும்.

செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

1. 05-12-2022 – உலக மண் நாள்

கருப்பொருள்: Soils: Where Food Begins.